# இராசையா குலசிங்கம்

(இரத்தினம் பத்தர்)




# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29-09-2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் விராட்விஸ்வப் பிரமனே நமக.



# அல்வாய் தெற்கு,
# மாலிசந்தியைப் பிறப்பிடமாகக்
# கொண்ட

## அமரர்
## விஸ்வப் பிரம்மஸ்ரீ

# இராசையா குலசிங்கம்

இதைத்தினம் பத்தர் அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**29-09-2003**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எம் குல விளக்கிற்கு,

பாசமிகு தந்தையென தாத்தாவென

பாசமலர்களை சூடுகின்றோம்

பார்புகழும் நல்லோய் என்று

பார் புணந்து பாடுகின்றோம்

கடடங்கள் இல்லையென்றே

கடவுள் அழைத்தவனே


இம் மலருள் ஈரடிக்கே

எம் இதய அஞ்சலியாய்

சமர்ப்பிக்கின்றோம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



தோற்றம் மறைவு

1931-11-21 அமரர் 2003-08-30

# இராசையா குலசிங்கம் அவர்கள்

(இரத்தினம் பத்தர்)

## திதி நிர்ணய வெண்பா

தானம் தவங்கருணை தங்கும் குலசிங்கம்
வானவர்நா டெய்தி வதிந்தநாள் - ஊனமிலா
ஆண்டு சுபானுதனில் ஆமாவணி பூர்வம்
பூண்ட திதியையே போற்று.

K. Jena

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# பஞ்சபுராணம்

## விநாயகதுதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாய்கனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

மாதா பிதாவாகி மக்களாகி
மணிகடலும் மால் விசும்புந் தானே யாக்கி
கோதா விதியாய்க் குமரி யாக்கிக்
கொள் புலித் தோலாடைக் குழகனாகிப்
கோதாய மலர்கொண்டு போற்றி நின்று
புனைவார்தம் பிறப்பறுக்கும் புனிதனாகி
யாதானு மெனு நினைத்தார்க் கெளிதே யாகி
அழல்வண்ண வண்ணர்தம் நின்ற வானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

யானே பொய் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதாள் உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருள்வாய் அடியேன் வந்துறுமாரே.

## திருவிசைப்பா

இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும்
ஏழையேற் கென்னுடன் பிறந்த
ஐவரும் பகையே யார் துணை என்றாள்
அஞ்சல் என்றருள் செய்வாக் கோயில்
கைவரும் பழனங் இழைத்த செஞ்சாலிக்
கடைகியர் கலைதரு நீலம்
செய்வரம் பரம்பும் பெரும் பற்றப் பலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமை மண் வாளனுக்கே
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
கல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

நன்மை பெருகு அறநெறியே வந்தனைந்த நன்னூரின்
மன்னு திருத் தொண்டனார் வணங்கி மகிழ்தெழும் பொழிதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்னவர்தம்
சென்னிமிசை பாதமலர் சூட்டினான் சிவபெருமான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

துள்ளுமத வேட்கை கனையாலே
தொல்லை நெடுநீலக் கடலாலே
மெல்லவர சோலைக் குயிலாலே
மெய்யுருகு மானை தருவாயே
தெள்ளுதமிழ் பாடத் தெளிவோனே
செய்த குமரேச திறலோனே
வள்ளல் தொழ ஆனைக் கழலோனே
வள்ளி மணவாளப் பெருமானே.

## பட்டினத்தார் பாடல்

பிறக்கும் பொழுது கொண்டு வந்ததில்லை பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொண்டு போவதில்லை இடைநடுவில்
குறிக்கும் இச்செல்வம் சிவன் தந்த தென்று கொடுக்கறியா
திறக்கும் குலாமருக்கென் சொல்லுவேன் கச்சியேகம்பனே.

முடி சாய்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரு முடிவிரொரு
பிடிசாம்பராய் வெந்து மண்ணாவதும் கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லாற் பொன்னினம்பலவ
நடிசார்ந்து நாமுய்ய வேண்டு மென்றேயறிவாரில்லையே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறையரசு செய்க குறை விலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஸ்வப் பிரம்மறீ

# திரு. இராசையா குலசிங்கம்

அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

இராசையா நாகம்மாவிற்க்கு 1931இல் 3வது மகனாகப் பிறந்தார். மூத்தவர் கனகம்மா காலமாகி விட்டார், இரண்டாவது சிவலிங்கம் காலமாகி விட்டார், அடுத்ததாக அமரர் குலசிங்கம் அவதரித்தார். நான்காவதாக பவளம்மா, ஐந்தாவதாக மகேஸ் வரனும் காலமாகி விட்டார், ஆறாவதாக கோபால்கிருஸ்ணன் கடைசியாக பாலசிங்கம் காலமாகிவிட்டார்.

1947ஆம் ஆண்டு கரவெட்டியில் சம்பந்தர் என்னும் பெயரில் நகைக் கடை ஒன்றை ஆரம்பித்து பொறுப்புடன் தொழில் நடாத்தி வந்தார். சிறு வயதிலேயே தாய் தந்தையரை இழந்து விட்டதால் குடும்பப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு மிகவும் கஸ்ரப்பட்டு உழைத்து சகோதர்களை படிப்பித்து தொழிலும் கற்றுக் கொடுத்தார். பின்னர் சொந்தத்திலேயே சங்கானையைச் சேர்ந்த செல்லத்துரை சிவபாக்கியத்தின் 3வது புதல்வியான அன்ன லஷ்சுமியை மணம் முடித்தார். 5 வருடங்களாக பிள்ளைப் பேறில்லாமல் இறைவன் அருளால் மூத்த புதல்வியாக வசந்தா வந்து கிடைத்தார். இதனால் சந்தோசம் அடைந்து அடுத்தடுத்து பாஸ்கரன், சாந்தாவையும் 7 வருடங்களின் பின் தயாழன், யசோதாவையும் பெற்றெடுத்தார்.

எது நடந்தாலும் நன்மைக்கே என துன்பம் வந்தாலும் சந்தோசமாக ஏற்றுக் கொள்ளும் இவர் அடிக்கடி கீதாசாரத்தை கூறிக்கொள்வார். தனது சொந்த உழைப்பிலேயே இரண்டு வீடு கட்டி இரண்டு காணியும் வாங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருமக்களாக தயாபரன், உதயபானு, சண்முகலிங்கம், இராஜகோபால் என்போரையும் பேரப்பிள்ளைகளாக ஜனித்கா, ஜிதுஜா, கோபிகன், ஷோபிகன், கேசவன், யுவேதினி, சுரக்ஷனா, துர்க்கா என்பவர்கள் கிடைக்கப்பெற்று மகிழ்வடைந்தார்.

தனக்கு காலம் கிட்டிவிட்டது என்பதை அறிந்து அவர் சென்ற வருடமே சொல்லிவிட்டார். நீங்கள் அடுத்த வருடம் வல்லிபுரக் கோயிலுக்கு போகமாட்டீர்கள் அதனால் எல்லோரும் கோயிலுக்கு செல்லுங்கள் என்று சொன்னார். அதேபோல் இவ் வருடம் எந்தக் கோயிலுக்கும் செல்லமுடியாத நிலையாகி விட்டது. இறைபதம் சேர்வதற்கு முதல் நாளும் நான் நாளை பயணம் போறன் என்று பேரப்பிள்ளைகளிடம் சொன்னார். அதே போல் அடுத்த நாள் காலை இறைபதம் அடைந்து விட்டார். எங்கள் தந்தையார் ஓர் தீர்க்கதரிசி என்பதை யாரும் மறுக்க முடியாது. எது தீமை அளிக்கும், எது நன்மையளிக்கும் என்பதை முன் கூட்டியே சொல்லக் கூடியவர். அவர் கூறியது அப்படியே பலிக்கும். 30-08-2003இல் அனைவரையும் ஆறாத் துயரில் ஆழ்த்தி இறைபதம் அடைந்தார்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

''எது நிகழ்ந்தாலும் நிகழா விட்டாலும்
மரணம் மட்டும் நிகழ்ந்தே தீரும்
மாண்டவர் ஒரு பிடி மண்ணையும் தம்முடன்
எடுத்துச் செல்ல மாட்டார்''

– பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## காலஞ்சென்ற திரு. இ. குலசிங்கம் அவர்களுக்கு

*நற்கதி அருளுமாறு அன்னாரின் குடும்பத்தினர்*
*குலதெய்வங்களை வேண்டிப்*
*பாடிப்பராவியவை*

## மாலிசந்தை விநாயகரைப் பாடிப்பராவியவை

ஆலும் அரசும் அயலே எழில்சால் வயல்களுமாய்
ஞாலம் சிறந்திடச் சூழ் மாலிசந்தைப்பதி நாயகமாய்
கோலம் திகழ்ந்திட வீற்றிருந் தாண்டிடும் கொற்றவனே
சீலமார் எம் தந்தை முத்தியின் பம்பெறச் செய்தருளே.

தம்பிக்கு வள்ளி தனைத்தர வேழவடி வெடுத்தாய்
நம்பிப் பணிந்த நமதிடர் தீரத் துணைபுரிவாய்
அம்பொற் கரத்தினில் மோதகமேந்திய ஐங்கரனே!
உம்பர்க் கரிய உயர்பதப் பேறது தந்தருளே.

## காமாட்சி அம்மனைப் பாடிப் பரவியது

பற்பல ஆண்டுகள் நின்பதம் போற்றிய பண்புடையான்
கற்பக வல்விதனைநேர் காமாட்சி அம்மையே!
அற்புதம் பற்பல தந்தருளி நமைக் காத்திடுவாய்
அற்புத மான பதமளித் தாண்டு அருள்புரியே.

## அல்வாய் முத்துமாரி அம்மனைப் பாடிப்பரவியது

வளந்திகழும் அல்வாயாம் பதியில் மேவும்
வண்டமிழ்தேர் மக்கள் பலர் வரங்கிடந்தே
உளம்பொருந்திச் சேவித்து உருகிப்ப ரடி
ஊழ்வினைகள் போக்கிடவே கோயில் கொண்ட
பழம்பொருளே அருள்கூர் முத்துமாரி அம்மையே
பகவிரவுன் பொற்பாத சேவைக்காகக்
களங்கமின்றிப் பணி செய்த தந்தையாரைக்
கையனைத்துக் கயிலாயம் காட்டுவாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரங்கற் பாக்கள்

### மனைவி அன்னலட்சுமி புலம்பல்

குங்குமம் தீட்டாமல் கோல மஞ்சள் பூசாமல்
மங்கிலியம் கட்டாமல் மலர் சிகையில் சூடாமல்
தங்கநிறக் கூறை சாத்தி வெளி போகாமல்
பங்கவ மங்கிலியாய் பாரில் விட்டாய் என்துரையே.

வாய்விட் டுரைத்ததிரு வாசகம் மீறத்தெரியேன்
நாய்போல் பணியன்றி நான்வேறு தொண்டறியேன்
பேய்போல இங்கிருந்து பேதலித்து நான்கதற
நீபோன மாயமென்ன நீதியிதோ ராசாவே.

### மகன் பாஸ்கரன் பிரலாபம்

தெள்ளுதவத் தாலென்னைப் புவியிற் பெற்றே
தேனமுத மூட்டியிரு கரத்தா லேந்தி
விள்ளுகலை யூட்டிமதியூட்டி மேலாய்
விளங்குமுயர் செல்வமெலாம் விளங்கக் காட்டி
கொள்ளுபுகழ் ஈட்டிவைத்த தந்தைக் கோநான்
குடமுடைத்துக் கொள்ளி சிரமேலேற்றி
அள்ளியிட்டேன் வாய்கரிசி ஐயோ ஐயோ
ஆகொடியேன் என் செய்தேன் அவனிமேலே.

### பெண்பிள்ளைகள் புலம்பல்

(வசந்தா, சாந்தா,, தயாளினி, யசோதா,)

கண்ணின் மணிபோலக் காதலுடன் பெற்றெடுத்தே
வண்ண மடிமேல் வளர்த்தகம் நாம் மறவோம்
பொன்னை நிலத்தை மற்றும் பூங்கலைக ளோங்க வைத்த
அன்பை நினைத்துருகி வாடுகின்றோம் ஐயையோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் பிரலாபம்

மண்ணதிலே செய்துள்ள புண்ணியத்தின்
மரபெல்லா மொன்றான மாமா வான
நண்ணரிய தெய்வமே தமியோம் தம்மை
நட்டாற்றில் கைவிட்டு நடந்திட்டாயே
தண்ணீரை விட்டகன்ற மீனைப் போலத்
தத்தளித்துத் தவிக்கின்றோம் உம்மை நாடி
கண்ணீரைச் சிந்திச் சிந்திக் கதறி மாயக
காசினியி லேவிட்டாய் ஐயோ ஐயோ.

## பேரப்பிள்ளைகள் பிரலாபம்

அள்ளியள்ளி அமுதமூட்டிநல் லங்கையேந்தி அணைத்துமே
பள்ளி யேகவும் துள்ளியாடவும் பார்த்துளம் மகிழ்பேரனை
ஒள்ளிய வெள்ளைப் பாடை யேற்றியே ஊரெல்லாம்சுற்றி மூண்டெனி
கொள்ளி யேற்றிய பாவிகளெனக் கூறவும் கேட்கலானோமே.

## சகோதர சகோதரிமார் பிரலாபம்

உடலெடுத்த நாள்முதலாய் எம்மரிய
சோதரரே ஒருநா ளேனும்
கடுகடுத்துப் பேசாத பண்பினையும்
நின்சிரித்த கனிவாய் கண்டும்
படுமுடிச்சுப் போட்டானோ பாழியமன்
பகடேறிப் பறித்திட் டானோ
இடியிடத்தாற் போலவையோ ஏங்கினமே
எங்குற்றாய் சோதரரே ஐயோ ஐயோ.

## உற்றார், உறவினர் அயலார் பிரலாபம்

வீட்டுக்கு வந்ததும் வாவென்று கூப்பிட்டு விருந்தளித்து
நாட்டுக்கு கதைகளைப் பேசி நயமுடன் நின்றவரே
கூட்டைப் பிரித்திறை தன்பதம் போயினை கூடியழும்
வாட்டந் தவிருதல் இல்லையை யோவிந்தவையகத்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றம்

முன்னாளிற் புகழ் பெற்றே துலங்கா நின்று
முடிசூடி யரசாண்ட தருமராதி
மன்னாதி மன்னரெலாம் மாண்டே போனார்
மாநிலத்தின் வாழ்வதுதான் நீர்குமுளி யென்றே
உன்னுமறை யாகமங்கள் உரைத்தலாலே
உயிரகல் குலசிங்க உத்தமர்க்காய்
மண்ணுலகில் அழுவதெல்லாம் வீணே யென்று
மனத்திருத்தித் துயர்தவிர்ந்து வாழ்க நன்றே.

ஆக்கம்: **"வாணிதாசன்"**

''தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது''

**– பொய்யில்லாப் புலவர் –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் பதினாறு திருமந்திரங்கள்

| | | |
|---|---|---|
| ஓம் | சுமுகாய | நம |
| ஓம் | ஏகதந்தாய | நம |
| ஓம் | கபிலாய | நம |
| ஓம் | கஜகர்ணகாய | நம |
| ஓம் | லம்போதராய | நம |
| ஓம் | விகடாய | நம |
| ஓம் | விக்னராஜா | நம |
| ஓம் | கணாதிபதயே | நம |
| ஓம் | தூமகேதவே | நம |
| ஓம் | கணாத்யட்ஷாய | நம |
| ஓம் | பாலசந்த்ராய | நம |
| ஓம் | கஜானனாய | நம |
| ஓம் | வகர துண்டாய | நம |
| ஓம் | சூர்ப்பகணாய | நம |
| ஓம் | ஹேரம்பாயநம | |
| ஓம் | ஸ்கந்தபூர்வஜாய | நம |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



## சகலகலாவல்லி மாலை என்னும்

# சரஸ்வதி தோத்திரம்

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
 தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குந் தகாதுகொ
 லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
 தாகவின் டாக்கும்வண்ணங்
கண்டாண் சுவைகொள் கரும்பே
 சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
 தோய்தர நாற்கவியும்
பாடும் பணியுற் பணிந்தருள்
 வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
 கனதனக் குன்றுமைபாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
 சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிக்குஞ் செந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலுந்
தோக்குஞ் செந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப்பி தந்தரு் செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலுங்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்து நிறைந்தாய்
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பனமு மவதான
முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிகை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயராமெஞ்
ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்ப்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பாதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்ப்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதி தோத்திர மாலை



# ஶ்ரீ துர்க்காதேவி அஷ்டகம்

பகவதி தேவி பர்வத தேவி
பலமிகு தேவி துர்க் கையளே
ஜெகமது யாவும் ஜெயஜெய வெனவே
சங்கரியுன்னைப் பாடி டுமே
ஹுநஹுந தகதக பசபச வெனவே
தளிர்த் திடுஜோதி யான வளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துக்கா! 1

தண்டினி தேவி தக்ஷிணி தேவி
கட்கினி தேவி துர்க் கையளே
தந்தன தான தனதன தான
தாண்டவ நடன ஈச்வ ரியே
முண்டினி தேவி முனையொளி சூலி
முனிவர்கள் தேவி மணித் தீவி
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா! 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளினி நீயே காமினி நீயே
கார்திகை நீயே துர்க் கையளே
நீலினி நீயே நீதினி நீயே
நீர்நிதி நீயே நீர் ஒளியே
மாலினி நீயே மாதினி நீயே
மாதவி நீயே மான் விழியே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா! 3

நாரணி மாயே நான்முகன் தாயே
நாகினி யாயே துர்க கையளே
ஊரணி மாயே ஊற்று காயே
ஊர்த்துவ யாயே ஊர் ஒளியே
காரணி மாயே காருணி தாயே
கானக யாயே காசி னியே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாமநி வாரணி ஜெய துர்க்கா! 4

திருமக ளானாய் கலைமக ளானாய்
மலைமக ளானாய் துர்க் கையளே
பெருநிதி யானாய் பேரறி வானாய்
பெருவலி வானாய் பெண் மையளே
நறுவமல ரானாய் நல்லவ ளானாய்
நந்தினி யானாய் நங்கை யளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா! 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதமும் நீயே வேதியள் நீயே
வேகமும் நீயே துர்க் கையளே
நாதமும் நீயே நாற்றிசை நீயே
நாணமும் நீயே நாய கியே
மாதமும் நீயே மாதவம் நீயே
மானமும் நீயே மாய வளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா! 6

கோவரை ஜோதி கோமள ஜோதி
கோமதி ஜோதி துர்க்கை யளே
நாவுறை ஜோதி நாற்றிசை ஜோதி
நாட்டிய ஜோதி நாச்சி யளே
பூவுறை ஜோதி பூரண ஜோதி
பூதநற் ஜோதி பூரணையே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா! 7

ஜெயஜெய சைல புத்திரி ப்ரஹ்ம
சாரிணி சந்த்ர கண்டி னியே
ஜெயஜெய கூஷ் மாண்டினி ஸ்கந்த
மாதினி காத்யா யன்ய யளே
ஜெயஜெய கால ராத்திரி கௌரி
ஷித்திதா ஸ்ரீநவ துர்க கையளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா! 8

****


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# ஸ்ரீ மகா லட்சுமி அர்ச்சனை

## 108 போற்றி

| | | | |
|---|---|---|---|
| 01) | ஓம் | அன்புலெட்சுமி | போற்றி |
| 02) | ஓம் | அன்னலெட்சுமி | போற்றி |
| 03) | ஓம் | அமிர்தலெட்சுமி | போற்றி |
| 04) | ஓம் | அம்சலெட்சுமி | போற்றி |
| 05) | ஓம் | அருள்லெட்சுமி | போற்றி |
| 06) | ஓம் | அஷ்டலெட்சுமி | போற்றி |
| 07) | ஓம் | அழகுலெட்சுமி | போற்றி |
| 08) | ஓம் | ஆனந்தலெட்சுமி | போற்றி |
| 09) | ஓம் | ஆகமலெட்சுமி | போற்றி |
| 10) | ஓம் | ஆதிலெட்சுமி | போற்றி |
| 11) | ஓம் | ஆத்மலெட்சுமி | போற்றி |
| 12) | ஓம் | ஆளும்லெட்சுமி | போற்றி |
| 13) | ஓம் | இஷ்டலெட்சுமி | போற்றி |
| 14) | ஓம | இதய லெட்சுமி | போற்றி |
| 15) | ஓம் | இன்ப லெட்சுமி | போற்றி |
| 16) | ஓம் | ஈகை லெட்சுமி | போற்றி |
| 17) | ஓம் | உலக லெட்சுமி | போற்றி |
| 18) | ஓம் | உத்தம லெட்சுமி | போற்றி |
| 19) | ஓம் | எளிய லெட்சுமி | போற்றி |
| 20) | ஓம் | ஏகாந்த லெட்சுமி | போற்றி |
| 21) | ஓம் | ஒளி லெட்சுமி | போற்றி |
| 22) | ஓம் | ஓங்கார லெட்சுமி | போற்றி |
| 23) | ஓம் | கருணை லெட்சுமி | போற்றி |
| 24) | ஓம் | கனக லெட்சுமி | போற்றி |
| 25) | ஓம் | கஜ லெட்சுமி | போற்றி |
| 26) | ஓம் | கான லெட்சுமி | போற்றி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 27) | ஓம் | கிரக லெட்சுமி | போற்றி |
| 28) | ஓம் | குண லெட்சுமி | போற்றி |
| 29) | ஓம் | குங்கும லெட்சுமி | போற்றி |
| 30) | ஓம் | குடும்ப லெட்சுமி | போற்றி |
| 31) | ஓம் | குளிர் லெட்சுமி | போற்றி |
| 32) | ஓம் | கெம்பீர லெட்சுமி | போற்றி |
| 33) | ஓம் | கேசவ லெட்சுமி | போற்றி |
| 34) | ஓம் | கோவில் லெட்சுமி | போற்றி |
| 35) | ஓம் | கோவிந்த லெட்சுமி | போற்றி |
| 36) | ஓம் | கோமாதா லெட்சுமி | போற்றி |
| 37) | ஓம் | சர்வ லெட்சுமி | போற்றி |
| 38) | ஓம் | சக்தி லெட்சுமி | போற்றி |
| 39) | ஓம் | சக்ர லெட்சுமி | போற்றி |
| 40) | ஓம் | சத்திய லெட்சுமி | போற்றி |
| 41) | ஓம் | சங்கு லெட்சுமி | போற்றி |
| 42) | ஓம் | சந்தான லெட்சுமி | போற்றி |
| 43) | ஓம் | சந்நிதி லெட்சுமி | போற்றி |
| 44) | ஓம் | சாந்த லெட்சுமி | போற்றி |
| 45) | ஓம் | சிங்கார லெட்சுமி | போற்றி |
| 46) | ஓம் | சீல லெட்சுமி | போற்றி |
| 47) | ஓம் | சீதா லெட்சுமி | போற்றி |
| 48) | ஓம் | சுப்பு லெட்சுமி | போற்றி |
| 49) | ஓம் | சுந்தர லெட்சுமி | போற்றி |
| 50) | ஓம் | சூரிய லெட்சுமி | போற்றி |
| 51) | ஓம் | செல்வ லெட்சுமி | போற்றி |
| 52) | ஓம் | செந்தாமரை லெட்சுமி | போற்றி |
| 53) | ஓம் | சொர்ண லெட்சுமி | போற்றி |
| 54) | ஓம் | சொரூப லெட்சுமி | போற்றி |
| 55) | ஓம் | சௌந்தர்ய லெட்சுமி | போற்றி |
| 56) | ஓம் | ஞானலெட்சுமி | போற்றி |
| 57) | ஓம் | தங்க லெட்சுமி | போற்றி |
| 58) | ஓம் | தனலெட்சுமி | போற்றி |
| 59) | ஓம் | தான்ய லெட்சுமி | போற்றி |
| 60) | ஓம் | திரிபுர லெட்சுமி | போற்றி |
| 61) | ஓம் | திருப்புகழ் லெட்சுமி | போற்றி |
| 62) | ஓம் | திலக லெட்சுமி | போற்றி |
| 63) | ஓம் | தீப லெட்சுமி | போற்றி |
| 64) | ஓம் | துளசி லெடசுமி | போற்றி |
| 65) | ஓம் | துர்க்கா லெட்சுமி | போற்றி |
| 66) | ஓம் | தூய லெட்சுமி | போற்றி |
| 67) | ஓம் | தெய்வ லெட்சுமி | போற்றி |
| 68) | ஓம் | தேவ லெட்சுமி | போற்றி |
| 69) | ஓம் | தைரிய லெட்சுமி | போற்றி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 70) | ஓம் | பங்கய லெட்சுமி | போற்றி |
| 71) | ஓம் | பாக்கிய லெட்சுமி | போற்றி |
| 72) | ஓம் | பாற்கடல் லெட்சுமி | போற்றி |
| 73) | ஓம் | புண்ணிய லெட்சுமி | போற்றி |
| 74) | ஓம் | பொருள் லெட்சுமி | போற்றி |
| 75) | ஓம் | பொன்னிற லெட்சுமி | போற்றி |
| 76) | ஓம் | போக லெட்சுமி | போற்றி |
| 77) | ஓம் | மங்கள லெட்சுமி | போற்றி |
| 78) | ஓம் | மகா லெட்சுமி | போற்றி |
| 79) | ஓம் | மாதவ லெட்சுமி | போற்றி |
| 80) | ஓம் | மாதா லெட்சுமி | போற்றி |
| 81) | ஓம் | மாங்கல்ய லெட்சுமி | போற்றி |
| 82) | ஓம் | மாசிலா லெட்சுமி | போற்றி |
| 83) | ஓம் | முக்தி லெட்சுமி | போற்றி |
| 84) | ஓம் | முத்து லெட்சுமி | போற்றி |
| 85) | ஓம் | மோகன லெட்சுமி | போற்றி |
| 86) | ஓம் | வரந்தரும் லெட்சுமி | போற்றி |
| 87) | ஓம் | வரலெட்சுமி | போற்றி |
| 88) | ஓம் | வாழும் லெட்சுமி | போற்றி |
| 89) | ஓம் | விளக்கு லெட்சுமி | போற்றி |
| 90) | ஓம் | விஷய லெட்சுமி | போற்றி |
| 91) | ஓம் | விஷ்ணு லெட்சுமி | போற்றி |
| 92) | ஓம் | வீட்டு லெட்சுமி | போற்றி |
| 93) | ஓம் | வீர லெட்சுமி | போற்றி |
| 94) | ஓம் | வெற்றி லெட்சுமி | போற்றி |
| 95) | ஓம் | வேங்கட லெட்சுமி | போற்றி |
| 96) | ஓம் | வைரவ லெட்சுமி | போற்றி |
| 97) | ஓம் | வைகுண்ட லெட்சுமி | போற்றி |
| 98) | ஓம் | நாராயண லெட்சுமி | போற்றி |
| 99) | ஓம் | நாக லெட்சுமி | போற்றி |
| 100) | ஓம் | நித்திய லெட்சுமி | போற்றி |
| 101) | ஓம் | நீங்காத லெட்சுமி | போற்றி |
| 102) | ஓம் | ராம லெட்சுமி | போற்றி |
| 103) | ஓம் | ராஜ லெட்சுமி | போற்றி |
| 104) | ஓம் | ஐஸ்வரிய லெட்சுமி | போற்றி |
| 105) | ஓம் | ஜெய லெட்சுமி | போற்றி |
| 106) | ஓம் | ஜீவ லெட்சுமி | போற்றி |
| 107) | ஓம் | ஜோதி லெட்சுமி | போற்றி |
| 108) | ஓம் | ஸ்ரீ லெட்சுமி | போற்றி |

******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயத்தினை வலம் வருவதன் பலன்

காலையில் வலம் வருதல் நோய் நீங்கும்

மாலையில் வலம் வருதல் எல்லாப் பாவமும் நீங்கும்

பகலில் வலம் வருதல் விருப்பம் அளிக்கும்

அர்த்த சாமத்தில் வலம் வருதல் மோட்ச சித்தி உண்டாகும்.

## எட்டுத் திக்கும் உரிய தெய்வங்கள்

| | | |
|---|---|---|
| கிழக்கு | - | இந்திரன் |
| தென்கிழக்கு | - | அக்கினி |
| தெற்கு | - | இயமன் |
| தென்மேற்கு | - | நிர்தி |
| மேற்கு | - | வருணன் |
| வடமேற்கு | - | வாயு |
| வடக்கு | - | குபேரன் |
| வடகிழக்கு | - | ஈசனம் |

## நவக்கிரக துதி

ஓம் நவக்கிரகாதி தேவர்களே நம:

ஓம் நவக்கிரக நாயகர்களே நம:

ஓம் சூரியக் கிரக தேவா நம:

ஓம் சந்திரக் கிரக நாதா நம:

ஓம் மங்களக் கிரக தேவா நம:

ஓம் புதன் கிரக தேவா நம:

ஓம் குருக் கிரக நாயகா நம:

ஓம் சனீஸ்வர பகவானே நம:

ஓம் ராகுக் கிரக தேவே நம:

ஓம் கேதுக் கிரக தேவே நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காயத்திரி மந்திரம்

ஓம் பூர் புவ ஸ்வா
தத் ஸவித்துர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோந ப்ரசோதாயாத்.

## பெரியோர்கள் உரைகள்

"என் மகனே உறுதியாக நில். பிறர் உதவியை எதிர்பாராதே வேறு மனிதர்களின் உதவியைக் காட்டிலும் ஆண்டவனுடைய உதவி எவ்வளவோ பெரிதல்லவா? பரிசுத்தனாயிரு. பகவானை நம்பு, அவரை நம்பியுள்ளவரை நீ நேர் வழியில் செல்கிறாய். உன்னை எதுவும் எதிர்த்து நிற்க முடியாது"

**ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள்**

" விபச்சாரம் செல்வங்களை விழுங்கிவிடும்
பிரார்த்தனை துன்பங்களை விழுங்கிவிடும்
தர்மம் நோயை விழுங்கிவிடும்.

**நபிகள் நாயகம்**

"வெற்றிகரமான ஒவ்வொரு மனிதனுக்கும் பின்னே
திறமைசாலியான ஒரு மனைவியிருப்பாள்"

**ப்ருக்ஹேய்ஸ்**

"வயதாவதைக் கண்டு பயப்படாதீர்கள்
பலருக்கு அந்த வாய்ப்பு கிடைக்காமலே போகிறது"

**பேஜ்யாட்**

"ஒழுக்கம் பிச்சைக்காரன் உருவில் இருந்தாலும்
கௌரவிக்கப்படும்"

**காளின்ஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்புத்தான் நமக்கும் ஆண்டவனுக்கும் உள்ள ஒற்றுமை. இவ்வளவு அண்டங்களையும் படைத்துக் காத்து வருகின்றான். ஆண்டவன் அவன் விடாமல் உழைக்கின்றான். அதுவும் இச்சையில்லாமல் உழைக்கின்றான். நாமும் அதேபோல் தன்னலம் கருதாமல் உழைத்தால்தான் ஆண்டவன் இதயத்தை ஓரளவு நெருங்கமுடியும்.

சிரிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள் - அது இதயத்தின் இசை
சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள் - அது சக்தியின் பிறப்பிடம்
விளையாட நேரம் ஒதுக்குங்கள் - அது இளமையின் ரகசியம்
படிக்க நேரம் ஒதுக்குங்கள் - அது அறிவின் ஊற்று
நட்புக்காக நேரம் ஒதுக்குங்கள் - அது மகிழ்ச்சிக்கு வழி
உழைக்க நேரம் ஒதுக்குங்கள் - அது வெற்றியின் விலை

## வெற்றியின் இரகசியம்

அன்பு காட்டு, ஆனால் அடிமையாகிவிடாதே!
இரக்கம் காட்டு, ஆனால் ஏமாந்து போகாதே!
பணிவாய் இரு, ஆனால் கோழையாய் இராதே!
கண்டிப்பாய் இரு, ஆனால் கோபப்படாதே!
சிக்கனமாய் இரு, ஆனால் கஞ்சனாயிராதே!
வீரனாய் இரு, ஆனால் போக்கிரியாய் இராதே!
தர்மம் செய், ஆனால் ஆண்டியாகிவிடாதே!
பொருளைத்தேடு, ஆனால் பேராசைப்படாதே!
உழைப்பை நம்பு, ஆனால் கடவுளை மறவாதே!

## அறிவுரைகள்

இறைவனை வணங்குக, இனிமையாகப் பேசுக.
உண்மையைப் பேசுக, அன்பாகப் பேசுக.
நன்மையே பேசுக, மெதுவாகப் பேசுக.
சிந்தித்துப் பேசுக, சபையறிந்து பேசுக.
சொல்வதையே செய்க, சோம்பலை அகற்றுக.
கோபத்தை நீக்குக, செருக்கினை அடக்குக.
உயர்வை எண்ணுக, நல்லதைச் செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவைப் பெருக்குக, அன்பைப் பேணுக.
பண்பை வளர்க்குக, பரிவினைக் காட்டுக.
நிந்தனை செய்யற்க, நிதானமாய் நடந்து கொள்க.

## எண்ணித் துணிக

பேசுவதற்குமுன் செவி கொடுங்கள்.
எழுதுவதற்குமுன் சிந்தியுங்கள்.
குறைகூறுவதற்குமுன் பொறுத்திருங்கள்.
பிரார்த்தனை செய்யுமுன் மன்னியுங்கள்.
எதையும் கைவிடுமுன் முயலுங்கள்.
மரணத்துக்குமுன் மற்றவர்க்கு உதவுங்கள்.

## வாரியார் சுவாமிகளின்
## பொன்மொழிகள்

வருவரும் போவதும் இரண்டு இன்பம் துன்பம்
வந்தால் போகாதது இரண்டு புகழ் பழி
போனால் வராதது இரண்டு மானம் உயிர்
தானாக வருவது இரண்டு இளமை மூப்பு
நம்முடன் வருவது இரண்டு பாவம், புண்ணியம்
அடக்க முடியாதது இரண்டு ஆசை, துக்கம்
தவிக்க முடியாதது இரண்டு பசி, தாகம்
நம்மால் பிரிக்க முடியாதது இரண்டு பந்தம், பாசம்
அழிவைத் தருவது இரண்டு பொறாமை, கோபம்
எல்லோருக்கும் சமமானது இரண்டு பிறப்பு, இறப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

## நமது உடலில்.....

01) நமது மூளை 10,000 விதமான நறுமணங்களை நினைவுபடுத்தக் கூடியது.

02) மனித உடலில் 24 மூலகங்கள் உள்ளன.

03) கருவில் இருக்கும் குழந்தை கூட கனவு காண்கிறது.

04) மனிதனின் பாதங்களில் 26 நரம்புகள் உள்ளன.

05) மனித உடலிலேயே மிக குளிர்ச்சியான பாகம் மூக்கின்நுனி

06) மனித செல்களில் அடங்கியுள்ள குரோமசோம்களின் எண்ணிக்கை 23 கோடி.

07) உடலிலுள்ள நீளம் கூடிய கலம் நரம்புக் கலம்.

08) உடலிலுள்ள மிகப் பெரிய சுரப்பி ஈரல்.

09) மனித மூளையின் எடை 1360 கிராம்.

10) மனித கைகள் 27 சின்னஞ்சிறு எலும்புகளால் உருவானவை.

11) நாம் பிறக்கும் போது 270 எலும்புகளுடன் பிறக்கின்றோம். ஆனால் இறக்கும் போது நமது உடலில் 206 எலும்புகள் மட்டுமே இருக்கும். மீதி எலும்புகள் நாம் வளர வளர ஒன்றோடு ஒன்று இணைந்து விடும்.

12) மனித உடலில் தொழில் அற்றுப்போன 90 உறுப்புகள் காணப் படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கு ஒரு நூலகம் திறக்கப்படுகின்றதோ
அங்கு ஒரு சிறைச்சாலை மூடப்படுகின்றது.

**சுவாமி விவேகானந்தா**

**தோல்வியைக் கண்டு அஞ்சுபவனிடமிருந்து வெற்றி விலகுகின்றது.**

**அமெரிக்காவால் இலக்கியத்துறைக்கு வழங்கப்படும் விருது - புலிஸ்டா**

**கிரிக்கெட்டின் பைபிள் எனப்படுவது - விஸ்டன் சஞ்சிகை**

**மத்திய தரைக்கடலின் திறவு கோல் - ஜிப்ரோல்ரா.**

**உலகின் சர்க்கரை கிண்ணம் - கியூபா.**

**ஏரிகளே இல்லாத நாடு - பின்லாந்து**

**கம்யூனிசத்தின் தந்தை - கார்ல்மார்க்ஸ**

************************
************
********
****
*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேஸ்மேக்கர் (Pace maker)

எமது இதயத்தின் வலது சோணையறையினுள் காணப்படும் பேஸ்மேக்கர் என்ற பகுதியே இதயத்துடிப்பை சீராக நிகழச் செய்ய உதவுகிறது. இதில் ஏதாவது பாதிப்பு ஏற்படுமாயின் இதயத்தினது குருதி பம்பும் தொழிற்பாடு சீரற்றதாகி விடும்.

இதற்கென செயற்கையாக தயாரிக்கப்பட்ட பேஸ்மேக்கர் தற் போது பாவனையிலுள்ளது. இக் கருவி சீரான இடைவேளை களில் மின்னதிர்வை இதயத்துக்கு வழங்கி இதயத்துடிப்பைச் சீர்செய்து விடுவதனால் மரணம் தவிர்க்கப்பட்டு விடுகிறது.

## திறந்த இருதய சத்திரசிகிச்சை (Open heart surgery)

இதய வால்வுகள் செயற்படாமை, இதயத்தில் ஏற்படும் துவாரம் (Hole in the hert) போன்ற பல சந்தர்பங்களில் இதயத்தையே வெட்டித் திறந்து திருத்தங்களைச் செய்யும் அவசியம் சத்திர சிகிச்சை நிபுணர்களுக்கு எழுகின்றது.

இத்தகைய சிகிச்சை வசதிகள் நம் நாட்டிலும், அயல் நாடான இந்தியாவிலும் சில முன்னணி வைத்தியசாலைகளில் உள்ள போதிலும் இதற்கு பெருந்தொகைப் பணம் தேவைப்படுகின்ற தென்பது அனைவருக்கும் கவலையளிக்கின்ற ஓர் விடயமாகவே உள்ளது.

## கொலம்பியா விண்வெளி ஓடம்

கொலம்பியா விண்வெளி ஓடம் ஒரு விமானம் போல உருவாக் கப்பட்டிருக்கின்றது. இது சுமார் 100 தடவைகள் விண்வெளிக்குச் சென்று மீளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

விண்வெளி ஆய்வில் பல நோக்கங்களை இது நிறைவேற்றும் வல்லமை கொண்டது. முப்பதினாயிரம் கிலோ எடை கொண்ட பொருட்களையும் ஏழு பேரையும் இது விண்வெளிக்கு எடுத்துச் செல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்கைக் கோள்களை விண்வெளிக்கு ஏவுதல், அவற்றிற்கான இடர்கால உதவி, திருத்த வேலைகள், மீட்புப்பணி போன்றவற்றை மேற்கொள்ள இது தயாராக இருக்கும். 1981இல் இது முதன் முதல் ஏவப்பட்டது. சக்தி இன்றி தரையிறங்கும் வசதிகள் இதன் வரப்பிரசாதம் எனலாம்.

## கையினுள் நடமாடும் உலகம்

தற்போது செல்லிடத் தொலைபேசிகளே (Mobile Phones) பெரும்பாலும் கணனித் தேவைகளை நிறைவு செய்யும் சாதனங்களாக மாறி வருகின்றன. அவற்றில் காணப்படும் திரை ஒரு கணனித் திரைக்கு ஒப்பானது. வீடியோ தொலைக்காட்சி பார்ப்பதற்கும், ஈமெயில் தேவைகளுக்கும் இது வாய்ப்பாக மாறி வருகின்றது. இணையத் தொடர்புடனான (Internert) இத் தொலைபேசிகள் கையடக்கமானவை.

வெகுவிரைவில் இவை உலகினில் அனைவரது கைகளில் அடங்கியிருக்கும் என நம்பப்படுகின்றது.

## விஞ்ஞான யுக அவதாரம்

ஜப்பானின் கொண்டா நிறுவனம் தயாரித்துள்ள அசிமோ (Asimo) எனப்படும் றோபோ பற்றிப் பிரபல்யமாகப் பேசப்படுகின்றது. அதனால் கதைக்கவும் சொல்லுக் கேட்கவும், படிகளில் ஏறவும் சிறுமியுடன் நடனமாடவும இயலுகின்றது. விரைவில் வீட்டுக்கு ஒரு றொபோ இப்படி வாய்த்து விட்டால் எல்லா வேலைகளையும் முரண்டு பிடிக்காமல் அதுவே செய்து தந்துவிடும். காவலுக்குக் கூட நாய் வளர்க்கத் தேவையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லேசர் தொழில் நுட்பம்

சாதாரண ஒளி பல அலை நீளங்களை கொண்டது. பல திசைகளிலும் பாய்கின்றது. லேசர் ஒளி கீற்றில் ஒரே அலை நீளமான ஒரே திசையில் சீராகப் பாயும் ஒளி அலைகள் பிறப்பிக்கப்படுகின்றன. எனவே நிறத்திலும் வலுவிலும் அவை தூய்மையானவை.

சாதாரண ஒளிப்பிறப்பாக்கியும் லேசர் ஒளிப்பிறப்பாக்கியும் படத்தில் காட்டப்பட்டுள்ளது.

எனவே இவை சாதாரண ஒளியைவிடத் துள்ளியமான அவதானிப்புக்கள், அளத்தல், வீடியோ, கணனி, மற்றும் மருத்துவ சாதனங்களில் பயன்படுத்தப்படுகின்றன.

## சுதந்திரச் சிலை

பிரான்ஸ், அமெரிக்க நாடுகளுக்கிடையேயான நல்லுறவின் அடையாளமாக, அமமெரிக்காவின் நியூயோர்க் துறைமுக நுழைவாயிலுள்ள லிபர்ட்டி தீவில் சுதந்திர தேவிச் சிலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. சிலையின் பாதம் முதல் தீப்பந்தம் வரை 46m உயரம் உள்ளது. உலக மக்களைக் கவரும் சுற்றுலா மையங்களில் இதுவும் ஒன்றாகக் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறப்பின் பின்பு
# மறு பிறவி உண்டா

நிரந்தரமான ஒரு தெய்வீக சக்தி நமக்குள்ளேயே இருக்கின்றது. அதையே ஆத்மா என்று கூறுகின்றோம். நமது கனவில் நமது மனம் இல்லாத இடம் இல்லை. அதே போல உலகியல் வாழ்வில் ஆத்மா நிலவாத இடம் இல்லை. எங்கேயாவது இல்லையென்றால் அல்லவா, ஓரிடத்தை விட்டு இன்னொரு இடத்துக்கு போவது? இறந்த பிறகு பூத உடல் மட்டுமே எஞ்சி நிற்கின்றது. அந்தக் கரணம் என்னும் குஷம உடலுடன் ஆத்மா விடுதலை பெற்று செல்கின்றது. அத்துடன் அது வாழ்க்கையில் அனுபவித்து உணர்ந்த அனுபவங்களின் வாசனையும் தொடர்ந்து செல்கின்றது. இப்பொழுது நீங்கள் இங்கே இருக்கிறீர்கள், உங்களுடைய வீட்டில் இல்லை. அதேபோல் வீட்டிற்கு போய் விட்டால் இங்கே இருக்க மாட்டீர்கள். அதேபோல சூஷம் உடல் இடம் மாறுகிறது. நல்ல வாழ்க்கை வாழ்ந்தால் பதவி உயர்வு பெற்று இன்னும் உயர்வான வாழ்க்கையை அனுபவிக்கலாம். நல்ல விசயங்களை நாடி ஆசைப்பட்டிருந்தால் அந்த நல்ல வாசனையுடன் அவற்றை நிறைவேற்றிக் கொள்ள அடுத்த பிறவியை நாடிப் போகிறது. இதைப் புரிந்துகொள்ள வேண்டும். இவ்வாறு கூர்ந்து முனைப்புடன் உருவாகும் எண்ண சுத்தியே நமது அடுத்த பிறவியை நிர்ணயிக்கிறது. ஆக மறுபிறவித் தத்துவம் என்பது விஞ்ஞான பூர்வமானது. தர்க்க பூர்வமானது.

**மறுபிறவித் தத்துவம் கட்டுரையிலிருந்து**

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் மகா கும்பாபிசேக சிறப்பு மலர் 2002

✷நாம் தனித்துவமான இனம்

✷நமது வழக்காற்று ஒழுங்குகளை பேணி வாழ்வது நமது கடமை

✷நமக்கென்று வழங்கிவரும் பண்பாட்டு முறைகளை நாம் பின்பற்ற தவறினால் நாம் நாமாக வாழ முடியாது. நாம் வாழ்ந்தற்குரிய அடையாளங்களே இல்லாமல் போய்விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எங்கள் குடும்பத் தலைவர்

**இராசையா குலசிங்கம்**

**அவர்களின்**

மறைவுச் செய்தி கேட்டு
எம்மை நாடிவந்து வேண்டிய சகல
உதவிகளும் செய்த அனைவருக்கும்
தொலைபேசி மூலமும், கடிதம் மூலமும்
அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும்
மரணச் சடங்கில் கலந்து கொண்டோருக்கும்
ஆறுதல் கூறியோருக்கும் ஆகாரம் அளித்தோருக்கும்
இறுதியாக இடம் பெறும்
அந்தியேட்டி கிரியையிலும், மதிய போசனத்திலும் பங்கு
கொண்டோருக்கும், உற்றார், உறவினர்,
நண்பர்களுக்கும்
இம்மலரை சிறப்புற அச்சிட்டு தந்த
ஸ்ரீ சாயி அச்சகத்தினருக்கும்
எமது நன்றியை
காணிக்கையாக்குகிறோம்.

அல்வாய் தெற்கு,
அல்வாய்,
மாலிசந்தி.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் விராட் விஸ்வப்பிரமவே

# வம்சா வ

இரா~~சம்மா~~ + நாகம்மா

- கனகம்மா (அமரர்)
- சிவலிங்கம் (அமரர்)
- மகேஸ் (அமரர்)
- பவளம்மா
- கோபாலகிருஸ்ணன்

**குலசிங்கம்** (இரத்தினம்) +


- வசந்தா + தயாபரன் → ஜனித்தா, ஜிதுஜா
- பாஸ்கரன் + உதயபானு → கோபிகன், ஷோபிகன்
- சாந்தா + சண்முகலிங்கம் → கேசவன், யுவேதினி (லண்டன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நம:

# வம்சா வழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

- எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
- எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
- எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
- உன்னுடையது எதை இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய்?
- எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
- எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாகுவதற்கு.
- எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
- எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
- எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொவருடையதாகிறது.
- மற்றொரு நாள் அது வேறொருவருடைதாகும்.
- இந்த மாற்றம் உலக நியதியாகும்.

JOTHI 2501

ஸ்ரீ சாயி கொம்பியூட்டர், ஒவ்செட் பி... வீதி, பூநாறிமரத்தடி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org